**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 172** **நாள் : 13.07.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு-169 தாதண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தூய்மைப் பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இன்று (13.07.2025) தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வார்டு 169, தாதண்டர் நகர் அரசு ஊழியர் குடியிருப்புப் பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் இன்று முதல் (13.07.2025) தூய்மைப் பணி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 13, வார்டு 169, தாடண்டர் நகர் அரசு குடியிருப்பு பகுதி, 70.73 ஏக்கர் பரப்பளவு உள்ளடக்கியதாகும். இங்குள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை சுமார் 1844 என கணக்கிடப்பட்டுள்ளது- மேலும் 1500 குடியிருப்புகள் வரவுள்ளன. இவ்வளாகத்தில் தூய்மைப் பணி மற்றும் இதர பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்குடியிருப்பு வளாகம், பூங்கா, விளையாட்டுத் திடல், சமுதாய கூடம், பள்ளி கட்டிடம், மருத்துவமனை, கடைகள் மற்றும் அரசு அலுவலகங்களில் தூய்மை பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததால் இப்பகுதியில் சுகாதார மேம்பாட்டிற்காக மாண்புமிகு துணை மேயர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பொதுப்பணித்துறையிடம் ஒப்புதல் பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியே அர்பேசர் சுமித் நிறுவனம் மூலம் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

இதன்படி தாடண்டர் நகர் அரசு குடியிருப்பு பகுதியில் உள்ள 5440 மீட்டர் நீளம் கொண்ட சாலைகள் மற்றும் இவ்வளாகத்திலுள்ள அனைத்து கட்டிடங்களில் தூய்மைப்பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

26 தூய்மை பணியாளர்கள், 14 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு காம்பாக்டர் வாகனம், 1100 லிட்டர் கொள்ளளவு கொண்ட 46 குப்பைத்தொட்டிகள், 120 லிட்டர் கொள்ளளவு கொண்ட 20 சுழற்சி தொட்டிகள் (Rotomac Bin), 2 சூப்பர்வைசர்கள், ஒரு கனரக வாகன ஓட்டுநர், 2 கனரக வாகன உதவியாளர்கள் இப்பணிக்காக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., கோடம்பாக்கம் மண்டலக் குழுத் தலைவர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி, உர்பேசர் தலைமை செயல் அலுவலர் திரு. முகமது சையத் மற்றும் அலுவலர்கள் குடியிருப்புப் பகுதி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**